பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 12 (27—11—68) புதன் ★ வெளியூர் : கார்த்திகை 13 (28—11—68) வியாழன் [இதழ் : 135

எண்ணூர் மின்விசை நிலைய விரிவுத் திட்டம்

திட்டக் குழு ஒப்புதல்

புதுடில்லி, நவ. 27—

"எண்ணூர் அனல் மின் விசை நிலையத்தை விரிவுபடுத்த முயற்சிக்கும் தமிழக அரசின் திட்டத்திற்குக் கொள்கையள வில் திட்டக் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது; தமிழக அரசு அனுப்பியுள்ள விரிவுத் திட்டத்தின் விவரங்கள், ஆய் வில் இருக்கின்றன"

என்று, மாநிலங்களவையில், நீர்ப் பாசனத் துணையமைச்சர் சித்தே சுவர பிரசாத் தெரிவித்தார்.

சேலம் இரும்புக் கனியை வெட்டியெடுப்போம்

நான்காவது திட்டத்தின் துவக்கத்திலிருந்தே தமிழக அரசு முயற்சிக்கும்

இரசாயனம் உள்ளிட்ட தொழிற்சாலைகள் பல துவங்குவதற்கும் திட்டமிடப்படுகிறது

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, நவ. 27—

"நான்காவது திட்டத் துவக்கத்திலிருந்தே தமிழக அரசு சேலம் இரும்புக் கனியை வெட்டியெடுக்கத் துவங்கும்; சேலத்தில் உருக்காலை ஏற்படுவதற்குத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கையில், இரும்புக் கனி வெட்டியெடுக்கும் முயற்சியும் துவக்கப்பட்டுவிடும்.

"நான்காவது திட்ட காலத்தில் புதிய இரசாயனத் தொழிற்சாலைகள் துவங்கப்படும்; நெய்வேலி திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் துணைப் பொருள்கள் பயன்படுத்தப்படும்; அத்துடன் மின்சார — எலெக்ட்ரானிக்ஸ் பொருள்கள், உணவு — கனிகளைப் பக்குவம் செய்வது போன்ற தொழில்களும், தொழில் எஸ்டேட்டுகளும், மருந்து உற்பத்தித் தொழில்களும் ஏற்படுத்தப்படும்; பஞ்சாலைகளின் நிலைமை பலப்படுத்தப்படும்.

"தமிழகத்தில் இயங்கிவரும் 400-க்கும் மேற்பட்ட தொழில் கூட்டுறவுகள் மேலும் விறுவிறுப்புடன் இயங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்"

இவ்வாறு கைத்தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ரோட்டரி கிளப் கூட்டத்தில், நான்காவது திட்டம்பற்றிப் பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"கஞ்சமலை இரும்புக் கனியை (சேலம் அருகில) வெட்டி எடுக்கத் துவங்கும் பணியை, மாநிலத் தொழில வளர்ச்சிக் கழகத் திடம் ஒப்புவிப்பதறகு அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருககிறது.

சேலம் இரும்புக் கனியை வெட்டி எடுப்பதில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பல உலோக -- சுரங்க நிறுவனங்கள் அக்கறை காட்டியுள்ளன.

இதுவரையில் நடத்திய சோதனைகளிலிருந்து, நெய்வேலி நிலக் கரியைக் கொண்டு சேலம் இரும்புக் கனியைச் சிக்கனமாக உருக்கி உருக்காக மாற்ற முடியும் என்று தெரிந்திருக்கிறது.

முதலமைச்சா ஜப்பானுக்கு சென றிருந்தபோது பல நிறுவனங்கள் சேலம இரும்புக் கனியை வெட்டியெடுப்பதில அக்கறை காட்டின; இததுறையில நாம விரைவில் ஏதேனும செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஏதேனும் தாதுப் பொருள்கள் கிடைக்கக் கூடுமா என்பதுபற்றி அண்மையில் விமானம் மூலமும், வேறு வழிகளிலும் ஆய்வுகள் நடத்தப்பட்டன; இந்த ஆய்வுகளின் முடிவுகள் சாதகமாகவே இருக்கக்கூடும் என நம்புகிறேன்; சில உயிர்ப்புள்ள தகவல்கள் கிடைத்திருக்கின்றன."

அண்மையில் பொருளாதார முடக்கத்தால் பாதிக்கப்பட்ட-- பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகக்கூடிய பஞ்சாலைகளைச் சீரமைப்புச் செய்யவும், தற் காலத் தேவைகளுக்குத் தகுந்தவாறு புதுப்பிக்கவும் வழிதுறைகளை அரசு ஏற்கனவே ஆராய்ந்து வருகிறது."

சென்னைக்குப் பாதாள இரயில்வே

நான்காவது திட்டத்தில் ஆய்வு செய்யப்படும்

புதுடில்லி, நவ. 27—

"சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற பெரிய நகரங்களில் பாதாள சுற்றுப்புற இரயில்வே போக்குவரத்துக்கான ஆய்வு நடத்த நான்காவது திட்டத்தில நிதி வசதி செய்யப்படும எனத திட்டக் குழு சூசகமாகத் தெரிவித்திருக்கிறது"

என்று மக்களவையில், துணை இரயில்வே அமைச்சர் பரிமள்கோஷ் தெரிவித்தார்.

"பெரிய நகரங்களில் இது போன்ற இரயில்வே போக்குவரத்து அவசியம் அதிகரித்துவருகிறது" எனக் குறிப்பிட்டுக் கேள்விகள் பல கேட்கப்பட்டன.

பழம்பெரும் பெயரை மீண்டும் பெற்றோம்!

டிசம்பர் முதல் நாளன்று விழாவெடுத்து மகிழ்வோம்

சென்னை, நவ. 27—

"'தமிழ்நாடு' என்ற பழம்பெரும் பெயரை--சேர-சோழர்-பாண்டியர் காலத்தே இருந்த பெயரை -- இப்போது நாம் மீண்டும் பெற்றிருக்கிறோம்; இடைக்காலத்தில் வேறு ஏதேதோ இழிவைக் கற்பிக்கக்கூடிய பெயர்களெல்லாம் இருந்தன; அவை இப்போது ஒழிந்தன; 'தமிழ்நாடு' என்ற பெயரை நாம் மீண்டும் பெற்றுள்ளோம்; இதை விழாவெடுத்துக் கொண்டாடி நாமெல்லாம் வரவேற்போம்; டிசம்பர் முதல் நாள் விழா எடுக்க அண்ணா நமக்கெல்லாம் கட்டளையிட்டிருக்கிறார்!

"'செந்தமிழ் நாடென்னும் போதினிலே--இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று நாற்பதாண்டுகளுக்கு முன்பு கவி சுப்பிரமணிய பாரதி கூறினார்; அத்தகைய பெருமையையும் பூரிப்பையும் அளித்

(1-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

திடத் தக்கது 'தமிழ்நாடு' என்னும் பெயர்!--'தேனைப் பருகினால்--சுவைத்தால் இனிமை தரும் அத்தகைய சொல் மக்கள் காதில் வந்து விழுந்தால், தேனைப் போல் இனிக்கும்' என்று பாரதியார் பாடினார்; அந்தத் தேனைப் பருகும் நாளாக டிசம்பர் முதல்நாளைக் கருதி-- அந்நாளில் அண்ணாவின் கட்டளைப்படி விழாவெடுத்து மகிழ்வோம்!"

—கல்வி -- தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

(85-வது வட்டக் கூட்டத்தில்)

தலைமைக் கழக அறிக்கை

'தமிழ் நாடு' -- வெற்றி விழா நாளில்....

நன்றி அறிவிப்புத்

தீர்மானம் இயற்றுவீர்!

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றப்பட்டதையொட்டி 1—12—68 அன்று நாடெங்கும் கொண்டாடப்படும் மகிழ்ச்சி விழாக் கூட்டங்களின் இறுதியில் கீழ்க்காணும் தீர்மானத்தை நிறைவேற்றி, இந்தியத் தலைமை அமைச்சருக்கும், தமிழ்நாடு முதலமைச்சருக்கும் படிகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொதுக்கூட்டங்கள் நடைபெறாத ஊர்களில் அந்தந்த அமைப்பின் செயற்குழுக் கூட்டத்தை 1—12—68 அன்று கூட்டி - அதில் கீழ்க்காணும் தீர்மானத்தை நிறைவேற்றி - மேற்கண்டபடியே அனுப்பிவைக்குமாறு எல்லா சிற்றூர்—பேரூர்—நகர—பெருநகரக் கழக அமைப்புகளையும், இணை - சார்பு மன்றங்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானம் :

(அ) 'சென்னை மாநிலம்' என்பது நீங்கி, 'தமிழ்நாடு' தனது இயற்பெயராலேயே உலகத்தாரால் அழைக்கப்பட வேண்டும் என்ற தமிழர்களின் ஒருமித்த நெடுநாள் உணர்வையும் கோரிக்கையையும் அவ்வப்போது எதிரொலித்துப் போராடிய எல்லாத் தமிழ்த் தலைவர்களுக்கும், குறிப்பாக இந்த மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயரிடப்பட வேண்டுமென்று கோரி உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கும், தமிழினத்தின் வரலாற்றில் பொன்னாளெனத் திகழும் இந்த நாளில் இந்தக் கூட்டம் தனது நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' என்ற பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்ற தமிழினத்தின் உணர்வை மதித்து, அதனை, தாம் பதவியேற்றதும் சட்டமன்றத்தின் தீர்மானமாக உருப்பெறச்செய்த தமிழ்நாடு அமைச்சரவைக்கும், தீர்மானத்தை ஒரே மனதாக நிறைவேற்றிய தமிழ்நாடு சட்டமன்றத்தின் உறுப்பினர்களுக்கும் இந்தக் கூட்டம் தனது நன்றியறிதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது.

(இ) தமிழர்களின் ஒருமித்த உணர்வை உள்ளடக்கிய தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானத்தை ஏற்றும் உறுதி செய்தும் நாடாளுமன்றத்தில் ஒருமித்த கருத்தோடு சட்டமாக்கிய மத்திய அமைச்சரவைக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தக் கூட்டம் தனது நன்றியறிதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது.

---தலைமைக் கழகம் (தி.மு.க.)

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 கார்த்திகை 12 (27-11-68) புதன்

'தமிழ்நாடு' மலர்கிறது--
புதிய வரலாறு துவங்குகிறது

"செந்தமிழ் நாடேனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே"

என்று, தன்னைப் பெற்றெடுத்த மண்ணைப் பற்றி மகிழ்ந்து பாரதியார், பாராட்டிப் பாடினார். அத்தேனினும் இனித்திடக்கூடிய இத்திருப் பெயரை, தாங்கள் பிறந்த மண்ணுக்கு இட்டுக் களிப்பெய்திடக்கூடிய வாய்ப்பு இப்பொழுதுதான் தமிழக மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

'பாரதியாரின் வழிவந்தவர்கள் நாங்கள் மட்டுமேதான்' என அன்றும் இன்றும் மார்தட்டி உரிமை பாராட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியினர், பாரதியாரின் விருப்பத்தை நிறைவுசெய்ய விரும்பாது, சென்ற ஆண்டு துவக்கம்வரை காலங்கழித்து வந்தனர்.

பாரதியாரை உரிமை கொண்டாடி வந்தவர்கள், அவர் விழைந்த வண்ணம் 'தமிழ்நாடு' என, இம்மண்ணுக்குப் பெயர் சூட்ட விரும்பாது காலங்கழித்து வந்திருந்தால்கூட, அதைத் தமிழ் மக்கள் மறந்துவிடலாம் -- மன்னித்தும் விடலாம்; ஆனால், அவர்கள் விரும்பாது காலங்கழித்து வந்ததுடன் இருந்துவிடவில்லை; அதற்கு மாறாக, 'தமிழ்நாடு எனப் பெயரிட வேண்டும்' என்ற கோரிக்கையை முழுமூச்சாக தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர்கள் எதிர்த்திடவும் செய்துள்ளனர்.

அதாவது, தமிழ்நாடு எனப் பெயர் சூட்டத் தாங்கள் விரும்பாததுடன், 'பெயரிட வேண்டும்' என்ற கோரிக்கையை முழுமூச்சாக எதிர்த்தும் வந்திருக்கின்றனர் -- தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர்கள். ஆக, 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சூட்ட விரும்பாத தவறையும், 'பெயரிட வேண்டும்' என்ற கோரிக்கையை மூர்க்கமாக எதிர்க்கின்ற தவறையும், ஒரே காலத்தில் செய்துவந்திருக்கின்றனர் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியினர்.

இம்மண்ணுக்குத் 'தமிழ்நாடு என்ற இயற் பெயரைச் சூட்டுதல் வேண்டும்' என்ற கோரிக்கையை வலியுறுத்த, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த விருதை சங்கரலிங்கனார் என்ற பெரிய முதியவர், எழுபத்தெட்டு நாள் உண்ணாநோன்பு இருந்திட்டார். அம்முதியவருடைய நியாயமான கோரிக்கையை, 'ஏற்றுச் செயல்படுத்தப்படும்' என ஒரு வார்த்தை கூறியிருந்தாலும் போதும்—அம்முதியவரின் உயிர் அவருடைய உடலைவிட்டுப் பிரிந்திருக்க முடியாது.

ஆனால், அம்முதியவர் பிறந்த அதே ஊரிலும், அம்முதியவரின் சொந்தக்காரர் எனக் கூறத்தக்க நிலையைப் பெற்றிருந்தவருமான அன்றைய முதலமைச்சர் காமராசர், 'தமிழ்நாடு எனப் பெயரிடும் கோரிக்கைக்கு இணங்கவே முடியாது' என்று பிடிவாதமாகக் கூறி, முதியவர் சங்கரலிங்கனாரின் இறப்புக்கு அடிகோலிவிட்டார்!

இம்மண்ணுக்கு, இயல்பான -- பொருத்தமான -- நியாயமான தமிழ்நாடு என்ற பெயரினைப் பெறுவதற்காகத் தமிழரசுக் கழகத் தலைவரான நண்பர் ம. பொ. சி. அவர்கள் அறப்போராட்டம்கூட நடத்தியுள்ளார். அதற்கும் அசைந்து கொடுக்கவில்லை -- அன்று முதலமைச்சராகத் தமிழ்நாடு அரசு கட்டிலில் வீற்றிருந்த காமராசர்!

முன்னேற்றக் கழகமும் மற்ற தோழமைக் கட்சிகளுடன் கூட்டாக இணைந்து, 'தமிழ்நாடு எனப் பெயர் சூட்டவேண்டும்' என்ற கோரிக்கையை வலியுறுத்த, ஒரு நாள் பொது வேலைநிறுத்தத்தைக் கூட வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கிறது. அதற்கும் மனமாற்றம் பெற்றிடவில்லை -- தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர்கள்!

'சென்னை' என்ற பெயர் உலகம் முழுவதிலும் விளம்பரமாகி இருக்கின்ற பெயர்; அப்பெயருக்குப் பதிலாகத் 'தமிழ்நாடு' எனப் பெயரிடப்படும்பட்சத்தில் கட்டற்படைத் துறையில் இங்கிலாந்திடமிருந்து கிடைத்திடக்கூடிய சலுகையை இழக்கவேண்டி ஏற்படும்; எனவே, 'சென்னை' என்ற பெயரே நீடித்திருக்க வேண்டும் -- என்ற அடிப்படையில்லாத வாதத்தைக்கூட, அன்றையக் காங்கிரசு அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த ஒரு முக்கிய அமைச்சர் கூறியுள்ளார்.

இறுதியாக, 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டுவதற்குக்கூட, இருக்கின்ற காங்கிரசு அரசை விரட்டிவிட்டு, அவ்விடத்தில் கழக அரசை அமைத்திட்டால்தான் இயலும் என்ற முடிவுக்குத் தமிழக மக்கள் வந்துவிட்டனர்.

தமிழ்நாடு ஆட்சிப்பீடத்திலிருந்து காங்கிரசுக் கட்சியை, தமிழ்நாட்டு மக்கள் வெளியேற்றினர். அந்த ஆட்சிப் பொறுப்பை நமது முன்னேற்றக் கழகத்திடம் மனமுவந்து ஒப்படைத்தனர்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே -- இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்றாரே-அந்தப் பாரதியார் அன்றுகண்ட கனவு -- அன்றுதொட்டு இன்றுவரை தமிழக மக்கள் விரும்பிக் கோரிவந்திருக்கின்ற இலட்சியம் -- நமது கழகம் உட்பட அரசியல் கட்சிகள் அனைத்தும் கூட்டாக மேற்கொண்ட பொது வேலைநிறுத்தத்தின் மூலக் குறிக்கோள் -- தமிழ்நாட்டில் கழகம் அரசு பொறுப்பேற்றிருக்கின்ற இந்த நேரத்தில் வெற்றி வாகை சூடுகிறது.

தமிழ்நாட்டின் அரசுப் பொறுப்பு கழகத்திடம் இப்பொழுது ஒப்படைக்கப்பட்டிருப்பதுபோல் இல்லாமல், ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டிருந்ததுபோல் காங்கிரசுக் கட்சியினிடமே தமிழக மக்கள் ஒப்படைத்திருக்கும்பட்சத்தில், இன்றும்கூட இம்மண்ணுக்கு 'சென்னை' என்ற பெயர் நீடித்திருப்பதற்குத்தான், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியினர் துணை நின்றிருப்பர். 'பெயர் மாற்றத்தில் என்ன இருக்கிறது' என்ற பித்தலாட்டப் பேச்சையும் அந்தக் கனவான்கள் இன்றும் பேசிக் கொண்டிருப்பர்.

அன்றையக் காங்கிரசு ஆட்சியில் -- காமராசர் ஆணைப்படி ஆடிய காங்கிரசு ஆட்சியில், 'தமிழ்நாடு' என்ற நியாயமான பெயர் மாற்றத்துக்குக்கூட, கிளர்ச்சி --- பொது வேலைநிறுத்தம் -- அறப்போர் போன்ற நிகழ்ச்சிகள் தேவைப்பட்டிருக்கின்றன. இந்த உண்மையை, தங்களுக்கு விருப்பமான 'தமிழ்நாடு' என்ற பெயரைத் தாம் பிறந்த மண்ணுக்குச் சூட்டும் வாய்ப்பு கிடைத்துவிட்டதே எனத் தமிழக மக்கள் மகிழ்ந்திருக்கின்ற இத்தருணத்திலும் மறந்துவிடக்கூடாது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு, ஒருமனதாக அம்மன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அரசியல் கட்சி வேற்றுமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அம்மாமன்றத்தில் கூடியிருந்த உறுப்பினர்கள் அனைவரும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின் பாராட்டுதலையும், ஆதரவையும், ஒப்புதலையும் பெற்று நிறைவேறியுள்ள தீர்மானம், 'தமிழ்நாடு' என்ற இந்தப் பெயர் மாற்றத் தீர்மானமே ஆகும். நாடாளுமன்ற வரலாற்றிலேயே இது புதுமை! இது ஒன்றுதான் முதன்முறையாக நிகழ்ந்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி!

"பெயரைப் பொறுத்தவரையில், தமிழக மக்கள் ஒரு புதிய வரலாற்றை ஆரம்பிக்கின்றார்கள்"

என, பெயர் மாற்றத் தீர்மானத்தை மாமன்றத்தில் கொண்டுவந்த உள்துறை அமைச்சர் சுட்டிக்காட்டியிருப்பது, பொருள்படைத்த ஒன்றாகும்.

பம்பாய் மாநிலத்துக்கு, 'மாராட்டிரம்' எனப் பெயர் மாற்றப்பட்ட நேரத்தில், அம்மாநில முதலமைச்சராக இதே உள்துறை அமைச்சர் சவான் அவர்கள் இருந்தார்; அப்பொழுது அவர், 'மாராட்டிரம்' என்ற பெயர் 'உயிர் மூச்சு' என அறிவித்திருக்கின்றார். இத்தருணததில், தமிழக மக்களுக்கு அதை நினைவுபடுத்துகின்றோம்.

மொழிவழியில் மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்டதற்குப் பின்னர், ஆங்காங்கே வழங்கிவரும் மொழியை அடிப்படையாக வைத்துத்தான் குசராத் -- ஆந்திரம் -- மாராட்டிரம் என அம்மாநிலங்களுக்குப் பெயரிடப்பட்டன. எனவே, அதே நியாயத்தைப் பின்பற்றி இங்கும், 'சென்னை' என்ற பெயரை 'தமிழ்நாடு' என அப்பொழுதே மாற்றியமைத்திருத்தல் வேண்டும்.

எதிர்க் கட்சிகளின் கோரிக்கைக்கு இணங்குவதா -- அதிலும் முன்னேற்றக் கழகத்தின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளுவதா -- என்ற ஆணவத்தில், 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றக் கோரிக்கைக்கு அன்றையத் தமிழ்நாடு காங்கிரசு ஆட்சியினர் காலங்கழித்துவந்தனர். இன்று கழக ஆட்சியில் -- அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கொண்ட சனநாயகப் பண்புடைய ஆட்சியில் -- தமிழக மக்களின் நீண்டநாளைய நியாயமான கோரிக்கை வெற்றி பெற்றிருக்கிறது.

அன்றையத் தமிழக அரசின் கோரிக்கையிலிருக்கக்கூடிய நியாயத்தை உணர்ந்து, 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்துக்குத் தீர்மான உருவில் ஒப்புதல் தந்திருக்கின்ற இந்திய அரசை மனமாரப் பாராட்டுகின்றோம். பரிவு காட்டிப் பேசி, தீர்மானத்துக்கு முழு ஆதரவு காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமிழக மக்களின் நினைவிலிருந்து அகலமாட்டார்கள். அவர்களுக்கும் நமது பாராட்டும் நன்றியும்.

'சென்னை' மறைகிறது! 'தமிழ்நாடு' மலர்கிறது! தமிழ் மக்கள் உள்ளமெலாம் பூரிக்கிறது!

—கா. க.

ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (8)

[எஸ். ஆர்.]

இரும்பு மனிதர்--விந்தை விஞ்ஞானி!

"துரைசாமி!"

"ஐயா!"

"அந்த 'இதை' இப்படிக் கொஞ்சம் கொண்டு வா!"

"இதோ இருக்கிறதய்யா 'அது'!"

"கண்ணன்!"

"இதோ, திறந்துவிட்டேனய்யா கதவை!"

"துரைசாமி!"

"இந்தாங்கய்யா அந்தப் புத்தகம்!"

★

இரவு 10-30 மணிமுதல் விடியற்காலை 2 மணி வரை இப்படிக் குரல்கள் கேட்டுக்கொண்டே இருந்தன -- கோவை 'கோபால் பாக்' எதிரிலுள்ள ஒரு பொருட் காட்சிக் கட்டிடத்துக்குள்!

எங்களுக்குக்கூட முதலில் ஓர் ஐயம் -- 'என்ன இது; தமது பெயரைத்தான், தாமே இப்படி அழைத்துக்கொள்கிறாரோ' என்று!

அப்புறம்தான் தெரியவந்தது -- அவரது பெயரிலேயே உள்ள அந்த எளிய மனிதர்தான், உலகம் அறிந்த விஞ்ஞானி ஜி. டி. நாயுடுவின் உதவியாளர் என்பது! 'கண்ணன்' என்ற மற்றோர் இளைஞர் துரைசாமியைப்போல் ஜி. டி. நாயுடுவின் உதவியாளர்.

நடு இரவுப் பகுதியில் அவரோடு இருந்த சுமார் 3½ மணி நேரமும், அவர் குரல் ஒலிக்குமுன்பே ஓடிவந்து உதவி செய்தனர் -- அந்த இருவரும்!

அந்த 'இதை' என்கிறார்; எதை அவர் மனத்தில் கொண்டிருக்கிறாரோ அது வருகிறது! குறிப்பிட்ட ஒரு கதவினைத் திறப்பதற்குக் கூப்பிடுகிறார் உதவியாளரை; ஆனால், குறிப்பறிந்து ஏற்கனவே அப்பகுதியினைத் திறந்து வைத்துக் காத்திருக்கிறார் அந்த உதவியாளர்!

நாடுகள் போற்றும் ஜி. டி. நாயுடுவின் தொழில் நுட்ப அறிவைக் கண்டு வியந்துகொண்டிருந்த எங்கள் 'சுற்றுலா'க் குழுவினருக்கு, அவரை அறிந்திருக்கும் உதவியாளர்களின் மனப்பக்குவமும் ஆச்சரியத்தினைக் கொடுத்தது!

"ஐயா அவர்கள் குழந்தைபோல் பேசுவது உங்களிடம்தானய்யா! தனித்து எங்களுடன் இருக்கும்போது கோபம் வந்துவிட்டாலோ, கையில் எது இருக்கிறதோ அது தூள் தூள்" என்று கூறினார் ஓர் உதவியாளர்!

நாயுடுவின் கோபம் அனைவரும் அறிந்ததுதான்; ஆனால் அது காரண காரியத்துடன் இருக்கும் என்பதும் அனைவருக்கும் புரிந்ததுதான்! காலதாமதம் ஆகிவிட்டது என்பதற்காகச் சென்னை மாநகராட்சி அவருக்கு அளித்த வரவேற்பில் அவர் காட்டிய 'கோபம்' இன்னும் என் நினைவிலிருக்கிறது!

எனவேதான், கோவை மாவட்டச் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு அன்று இரவு கோயம்

(3-ம் பக்கம் பார்க்க)

இந்தியா மீது உடனடித் தாக்குதல்?
'அறிகுறி ஏதும் இல்லை' என்கிறார் அமைச்சர்

புதுடில்லி, நவ. 26—

"சீனாவும் பாகிஸ்தானும் கூட்டாகத் தாக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை இந்தியா முழுமையாக உணர்ந்திருக்கிறது; இதைக் கருத்தில் கொண்டு இந்தியா தன்னுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவருகிறது"

என்று பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங், மக்களவையில் தெரிவித்தார்.

"திடீரென்று தாக்குதல் நடத்தக்கூடிய சாத்தியக்கூறு இல்லாமல் போய்விடவில்லை; ஒருவர் எப்போதும் இத்தகைய தாக்குதலை எதிர்க்கத் தயாராக இருக்கவேண்டும்; ஆனால் பாகிஸ்தான் உடனடியாகத் தாக்கக்கூடும் என்பதற்கான அறிகுறி எதுவும் இல்லை" என்றார் அவர்.

விசாரணைக்குப் பின் வேலைநீக்க உத்தரவு ரத்து

திருநெல்வேலி, நவ. 25—

எட்டு மாதங்களுக்குமுன், திருநெல்வேலி தாலுகாவின் நொச்சிக்குளம் கிராமத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாகத் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட்டிருந்த பிரின்ஸ் என்னும் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு மீண்டும் இப்பொழுது வேலை தரப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியால் நடத்தப்பட்ட விசாரணைக்குப் பிறகே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கிணறுகளை ஆழப்படுத்த நிதியுதவி

கோவை, நவ. 25—

"தாராபுரம், பல்லடம், அவிநாசி தாலுகாக்களில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவும் ரூ. 8 இலட்சம் அனுமதிக்க வருவாய்த்துறை உறுப்பினர் ஒப்புதல் அளித்திருக்கிறார்"

என மாவட்ட கலெக்டர் பாங்கோ கூறியிருக்கிறார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தூர் வந்து ஜி.டி. நாயுடுவின் விருந்தினராகத் தங்க வேண்டிய குழு, சுமார் இரண்டு மணி நேரத் தாமதத்துடன் 'கோபால் பாக்'கை அடைந்தபோது, எனக்கு உள்ளூரச் சற்று சந்தேகம்தான் -- 'இரவு சாப்பாடு எடுத்து மூடப்பட்டுவிட்டதோ' என்று! நல்ல வேளை -- செய்தியாளர்கள் என்பதற்காக அவரது 'பக்ஞ்ச்சுவாலிடி'யில் சிறிது விதிவிலக்குத் தந்திருந்தார் எங்களுக்கு! அது மட்டுமல்ல -- வாயிற்படியில் நின்று ஒவ்வொருவரையும் அறிமுகத்துடன் கைகூப்பி வரவேற்று உபசரித்தார்!

ஏற்கனவே தாமதமாகிவிட்டிருந்ததால், இரவு உணவு உடன் ஆரம்பமாயிற்று, ஆறு நாட்களாகப் பஸ் நிற்க நேர்ந்த இடங்களிலெல்லாம் விருந்துகளைச் சந்திக்க நேர்ந்த எங்களுக்குத் தொழில் மேதையின் வீட்டில் பரிமாறபபட்ட இரவு உணவு, உள்ளே செல்ல மறுத்தது; 'இலையில் மீதி வைத்தால் கோபித்துக்கொள்வாரோ' என நான் யூகித்துப் பயந்தது சரியாகிவிட்டது; ஓர் இலையில் மிகுதி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு, 'என்ன இது?' என்ற பொருள் பொதிந்த கேள்வியைக் கேட்டேவிட்டார்!

உணவின் வகைகளிலும் அவரது உபசரிப்பு தனி வகைதான்; சத்துள்ளது -- உடலுக்குக் கேடுவிளைக்காதது மட்டும்தான் இருந்தது. மறுநாள் காலை சிற்றுண்டியின்போது, உணவுபற்றிய அவரது கண்டிப்பு மேலும் சற்றுத் தெரிந்தது; அது இதுதான் -- பரிமாறப்படும் எதையுமே, 'போதும்' என்று மறுக்கக்கூடாது; ஏனெனில், போதுமானதுதான் பரிமாறப்படும்; பரிமாறப்பட்டபின், எதையும் மீதி வைக்கக் கூடாது; ஏனெனில், முன்னரே போதுமானதுதான் பரிமாறப்பட்டிருக்கும்!

இட்டிலியை மட்டும் இரண்டாவதுமுறை 'பார்க்க' விரும்பிய ஒரு செய்தியாளர், 'இட்டிலி, இட்டிலி' என--கூச்சத்தையும் விட்டுக் கேட்டதுதான் மிச்சம்! இட்டிலியும் வரவில்லை-'இல்லை' என்ற பதிலும் இல்லை! 'காலை உணவுக்கு அவருக்குப் பரிமாறப்பட்டது போதும்' என்பது அதன் உட்பொருள்!

"பல பேர் தங்கியுள்ள பொது இடத்தில் குளிக்கச் சென்றால் என்னநேரிடுகிறது?" என்றார் அவர்.

"கொஞ்ச நேரம் காத்திருக்க நேரிடுகிறது"--- பதிலளித்தார் எங்களில் ஒருவர்.

"அது அநாவசியம்; அதைத் தவிர்க்க நான் ஒரு 'பஞ்சு மெத்தை' செய்திருக்கிறேன்—வாருங்கள்--பாருங்கள்."

சிமெண்டினால் செய்யப்பட்டு 'மொசாய்க்' பூசப்பட்ட சாய்வு இருக்கை; 'அமருங்கள்' என்றார் -- உட்கார்ந்தோம்; 'சாய்ந்து கொள்ளுங்கள்' என்றார்; அப்படியே செய்தோம்; ஐந்தடி பத்து அங்குலத்துக்குமேல் இல்லாதவர்களுக்கு சொகுசாக இருக்கிறதா' என்றார்; 'நன்றாக இருக்கிறது' என்றனர் அனைவரும்; 'அதற்கேற்றாற்போல் வளைவு செய்து கட்டப்பட்டது இது; பஞ்சு மெத்தை என்பது வேடிக்கைப் பெயர் -- வேறொன்றுமில்லை' -- நாங்களெல்லாம் சிரிப்பதற்கு முன்பே குழந்தைபோல் நகைக்கிறார் நாயுடு!

வேறு பகுதிக்குச் சென்றோம்; இடையே சிறிது பேச்சு; 'பகுத்தறிவு' ஒளிர்விட்டது மட்டுமல்ல -- தீப்பொறி தெரியப் பறக்கிறது அவரது உரையாடல்களில்! மூடப் பழக்கங்களைச் சாடுகிறார் அந்த விஞ்ஞானி! மொழி பற்றியும் சில கருத்துக்கள் -- 'தமிழுக்கு விரோதியாக உள்ள தமிழனின் உடம்பில், ஒரு துளி இரத்தத்தைக்கூட ஓடவிடக் கூடாது; ஊசி மூலம் உறிஞ்சி எடுத்துவிட வேண்டும்' என உணர்ச்சி படபடக்கக் கூறுகிறார்! 'இந்தி மட்டுமே தேசிய மொழி' என்ற பேச்சை எடுத்தாலோ, எழுச்சி மிகக்கொண்டு எதிர்ப்பினைக் காட்டுகிறார்!

"இதுபோன்ற கொள்கைகளில் நீங்கள் பெரியாரைப் போலவே இருக்கிறீர்கள், ஐயா" என்றார் ஒரு செய்தியாளர்; சிரித்துக் கொண்டே, 'அவருக்கும் ஒருபடி அதிகம் என்றுகூட வைத்துக்கொள்ளுங்களேன்' என்றார் அந்த விஞ்ஞானப் பெரியார்!

பொருட்காட்சிக் கட்டிடத்துக்குள் நுழையு முன்பே ஏற்கனவே பிரபலமாகியிருக்கும அவரது சாவி வரிசைகள் அறிமுகமாகின்றன! அவருக்குச் சொந்தமான பூட்டுக்கள் எத்தனை உண்டோ -- அத்தனையையும் திறக்கும் ஒரே சாவி மட்டும் அவரது சட்டைப் பையில் இருக்கிறது!

பஞ்சு மெத்தை அனுபவம்!

முதல்நாள் இரவு உணவு முடிந்த பின்னர், பலருக்கு ஆறு நாள் அசதி--அயர்வு! இந்த நிலையில், எதிரே உள்ள பொருட்காட்சிக் கட்டிடத்தை நோக்கிப் புறப்பட்டோம்; நாயுடுவே உடன் வந்தார் விளக்கிக் காட்ட!

"ஐயா--தூங்குவது எத்தனை மணிக்கோ?"

"இரண்டு மணிக்கு!"

"எழுந்திருப்பது?"

"ஆறு மணிக்கு!"

"போதுமா ஐயா?"

"நல்ல தூக்கம் என்றால் இதுபோதும்; அரை குறை என்றால் நாள் கணக்கில் தூங்கினாலும் பயனில்லை."

இந்த உரையாடலுக்குப் பின், 'தூங்கி வழிந்து' கொண்டு வந்த எங்களில் சிலருக்குச் சுறு சுறுப்புப் பிறந்துவிட்டது!

எழுநூறு ரூபாய் முதல் மூவாயிரம் ரூபாய்வரையில், ஏழை--நடுத்தர -- உயர் நடுத்தர நிலை படைத்த மக்களுக்காக அவர் கட்டி முடித்திருக்கும் மாதிரி வீடுகள் ஒவ்வொன்றிலும் அவருடன் 'குடிபுகுந்து--வாழ்ந்து' பார்த்துவிட்டு வந்தோம்; ஒரு சில மணி நேரத்தில் நிர்மாணிக்கப்படும் அவரது அதிசய வீடுகள்பற்றி ஆராய்வதற்காகத் திருவனந்தபுரம் நகரம் விடுத்திருந்த அழைப்பினையும் அவர் அப்போது காட்டினார்!

சிக்கனத்தக்கும் சிறப்புக்கும் பெயர் பெற்ற அவரது எத்தனையோ கண்டுபிடிப்புக்களைப் போலவே, மலிவு விலையில் உள்ள இந்தத் 'திடீர்' வீடுகளும் மக்கள் புழக்கத்துக்கு வராமலே போய்விடுமோ என்ற அச்சம்தான் மேலிடுகிறது!

கதவைத் திறந்தவுடன், கீழே உள்ள சிறு குழியினைக் காட்டுகிறார்; 'என்ன ஐயா' என்கிறோம்; 'டைனமைட்' என்று பதில் வந்தது; எங்களில் சிலரின் முகத்தில் பீதியே படிந்தது; ஒரு சிலர், பின்தங்கினாற்போல் நடக்கவும் செய்தனர்!

"என்றோ ஒரு நாள், இத்தனையையும் தகர்க்க இங்கே வெடி வைத்திருக்கிறேன்; 'சுவிட்சு' எதிரிலுள்ள என்னுடைய வீட்டில் -- எனக்கு மட்டும் தெரிந்த ஓர் இடத்தில் இருக்கிறது!"

"நீங்கள் இப்படியெல்லாம் சொல்லக்கூடாது ஐயா; உங்கள் திறமை எங்களுக்கெல்லாம் பயன்படவேண்டும்; உங்கள் அறிவுக்குப் பல வாரிசுகள் வேண்டும்; இந்த இரண்டையும் தராமல் நீங்கள் பொதுவாக நடப்பதும் பேசுவதும் எங்களுக்கெல்லாம் புதிராக இருக்கிறது"--- உள்ளத்தில் இருந்ததை அப்படியே கொட்டினார் எங்களில் ஒருவர்!

பொருளில்லாத ஒரு சிரிப்புதான், உலகம் வியக்கும் அந்த மேதையின் முகத்தில் வெளிப்பட்டது!

அனைத்தும் இரும்பு -- வரிசை வரிசையாகப் பல பொருள்கள் வடிவில் அழகுபட அமைக்கப்பட்டிருக்கின்றன! ஒரு வெளிநாட்டு இயந்திரம் என்றால், அதேபோல் அவரால் இங்கே தயாரிக்கப்பட்ட மற்றொன்று அதன் பக்கத்தில்! மோட்டார் பொருள்கள் பகுதி பகுதியாக -- ஆணி

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவுக்கு வெளிநாட்டு உதவி குறைந்ததற்குக் காரணம் என்ன?

மக்களவையில் உறுப்பினர்கள் கவலை

புதுடில்லி, நவ. 25—

இந்தியாவுக்கு வெளிநாட்டு உதவி குறைந்துகொண்டே போவது பற்றி மக்களவையில், உறுப்பினர்கள் பலர் கவலை தெரிவித்தனர்.

"இராசதந்திரத் துறையில் இந்தியா பெற்றுள்ள தோல்விதான் வெளிநாட்டு உதவி குறைந்ததற்குக் காரணமா?" என்றும் அவர்கள் வினவினர்.

பாகிஸ்தானுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவியுடன் இந்தியாவுக்குக் கிடைக்கும்—உதவியை ஒப்பிட்டு, 'பாகிஸ்தானுக்கு கிடைப்பதைவிட இந்தியாவுக்குக் குறைவாகக் கிடைக்கிறது' எனச் சுட்டிக்காட்டினர்.

வெளிநாட்டு உதவியின் ஒரு பகுதி வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை என்றும், ஏற்கனவே பெருந்தொகையாகச் சேர்ந்துள்ள கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கே பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிக் கவலை தெரிவித்தனர்.

ஒரு மணி நேரத்திற்குமேல் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயிடம் உறுப்பினர்கள், சரமாரியாகக் கேள்விகள் கேட்டபோது, அவர் கூறியதாவது:—

"இந்தியாவுக்கு வெளிநாட்டு நிதி உதவி எவ்வளவு கிடைக்கும் என்பதுபற்றி இப்போதுகூட எதுவும் சொல்லுவது இயலக்கூடியதன்று; தேவைப்படுகின்ற அளவுக்கு வெளிநாட்டு உதவி கிடைக்கவில்லையென்றால், நம்மிடம் இருப்பதை வைத்துக்கொண்டு காரியத்தில் இறங்க வேண்டியதுதான். அவ்வாறு செய்யவேண்டியிருக்குமானால், அதிலிருந்து நான் வழுவமாட்டேன்.

நமக்கு என்னென்ன அவசியமோ அவற்றையெல்லாம் கேட்கவும், அதற்காகப் பேச்சுவார்த்தை நடத்தவும் முயற்சித்துவருகிறோம்; அவை நமக்குக் கிடைக்கலாம்; அல்லது கிடைக்காமலும் போகலாம். உதவி கிடைக்காவிட்டால், திட்டத்துக்கு வேறு வழிகளில் பணம் திரட்டுவோம்.

புதிதாகப் பெறும் வெளிநாட்டு உதவியில் ஒரு பகுதி, பழைய கடன்களைத் திருப்பித் தருவதற்குப் பயன்படுத்தப்படுவது உண்மைதான்; ஆனால், வாங்குகின்ற எல்லாக் கடன்களையும் வட்டியாகவே திருப்பித் தரும் காலம் வராது."

வாங்கிய கடனுக்கு ஆண்டுதோறும் ரூ. 161 கோடி வட்டியாம்

புதிதாக வாங்கும் கடன்களுக்குச் சமமாக ஆகிவிடுமோ என அச்சம்

ஏற்றுமதிகள்மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வட்டியைச் செலுத்திவிடலாமென மொரார்ஜி நம்பிக்கை

புதுடில்லி, நவ. 25—

"இந்தியா இதுவரையில் வாங்கியுள்ள கடன்களுக்கான வட்டியும், திருப்பிக்கொடுக்க வேண்டிய தவணைத் தொகைகளும் பெருகிக்கொண்டே போகின்றன; வெகு விரைவில் இவை, புதிதாக வாங்கும் கடன்களுக்குச் சமமாக ஆகிவிடும்; அந்த நிலைமையை அரசு எவ்வாறு சமாளிக்க உத்தேசித்திருக்கிறது?"

என்று மக்களவையில், திருமதி சுசேதா கிருபளானி கேட்டார்.

மொரார்ஜி தேசாய்:— "அத்தகைய நிலைமை உருவாவதற்குள் இந்திய ஏற்றுமதிகள் போதுமான அளவில் அதிகரித்துவிடும்; ஏற்றுமதிகள்மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு கடன்களுக்கான் வட்டியை அரசாங்கம் திருப்பிச் செலுத்த முடியும்; இந்திய ஏற்றுமதிகள் அதிகரித்து வருகின்றன."

ரூ. 161 கோடி வட்டி

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறியதாவது:—

"வெளிநாடுகளிலிருந்து வாங்கியுள்ள கடன்களுக்காக இந்தியா ஆண்டுதோறும் ரூ. 161 கோடி வட்டியாகச் செலுத்தவேண்டியிருக்கிறது: நாட்டின் தற்போதைய நிலையில், இந்தத் தொகையைச் செலுத்துவதில் சில தொல்லைகள், உள்ளன; ஆகவே, வட்டியைத் தருவதற்கான காலத்தை தவளிப் போடுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறோம்."

"இதைச் செலவுக் கணக்கில் எழுதிவிடுமாறு கேட்டுக்கொள்ளக் கூடாதா?"

என்று சில உறுப்பினர்கள் குறுக்கிட்டுக் கேட்டபோது, மொரார்ஜி கூறியதாவது:—

"அவ்வாறு கேட்கமாட்டோம்; எவ்வளவு விரைவில் தந்துவிடுகிறோமோ அந்த அளவுக்கு நல்லது.

கால்நடைகளைத் திரிய விடுவோர்மீது....

நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் திருத்தம்

சென்னை, நவ. 25—

சாலைகளில் திரியவிடும் கால்நடைகளின் சொந்தக்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காக சென்னை நகர போலீசு சட்டத்தில் திருத்தம் செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்துவருகிறது.

"கால்நடைகளை சாலைகளில் திரியவிடும் அவற்றின் சொந்தக்காரர்களுக்கு தற்போது விதிக்கப்படும் தண்டனை மிகக் குறைவு -- கடுமையாக இல்லை" என்று கருதப்படுகிறது.

எனவே, அவ்வாறு சொந்தக்காரர்களுக்குக் கடுமையான அபராதம் -- தண்டனை விதிக்க சட்டத்தில் வகை செய்வதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

கலைக் குழு முகவரி

கழக கலை நிகழ்ச்சி நடத்த விரும்பும் கழகத் தோழர்கள், கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்க:—

நாவலர் கலைக்குழு,
கருப்பையா--பாலன்,
16, இசுமாயில்புரம் 12வது தெரு
முனிச்சாலை, மதுரை-9

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணியாகப் பிரித்து வரிசைப்படுத்தப்பட்டுள்ளன! கிராமத்துப் பெரியவர்போல் உள்ள -- உலகம் சுற்றிவரும் அந்த மேதையின் மூளையிலிருந்து வெளிப்பட்ட விஞ்ஞானம், வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் பல இயந்திரங்களாக உருவெடுத்து நிற்கின்றன! சிறுவர் முதல் முதியவர் வரையில் பார்த்து மகிழ-- கண்டு அறிந்துகொள்ள அந்தக் கண் காட்சியில் இடம் பெற்றிருக்கும் பொருள்கள் ஏராளம்!

விடியற்காலை; மணி 1-30 ஆகிறது; எங்களுடைய அயர்வைக் கண்ட பின்னரே அவரும், 'சரி; ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்; காலை 7-30 மணிக்குச் சிற்றுண்டி' என விடை கொடுத்துவிட்டுச் சென்றார்!

சரியாக 7-30 மணிக்கு முதல் இருக்கையில் அவர் அமர்ந்திருந்தார்!

முதல் நாளிரவே, 'ஊட்டி சென்றீர்களே--- போட்டோ படத் தொழிற்சாலையைப் பார்த்தீர்களா?' என்று கேட்டிருந்தார்; 'பத்துகோடி ரூபாய்க்கு மேல் அந்நியச் செலாவணி உட்படச் செலவழித்து--பத்து ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக்கொண்டு---இன்னும் இலாபத்தினை நோக்கி அடியெடுத்து வைக்காத மத்திய அரசின் இந்துஸ்தான் போட்டோ படத் தொழிற்சாலைக்கு, அந்நியச் செலாவணி ஏதும் இல்லாமல் நானே தயாரித்துள்ள படம் எந்த வகையில் குறைவானது என்பதைப் பார்த்து வாருங்கள்' என்றார்!

அவரது பெயருடன் அறிமுகமாகியுள்ள பப்பாளி மற்றும் தாவர ஆராய்ச்சித் தோட்டத்துக்கு மத்தியில் இருந்த 'டிபி' என்னும் போட்டோ படத் தொழிற்சாலையை மறுநாள் காலை சென்று பார்த்தோம்; புகைப் படம், சினிமாப் படம் ஆகிய இரண்டும், அங்கே தயாரான போட்டோ பிலிமில் எங்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

'அவரது சவாலில் பொருள் இருக்கிறது' என்பது எங்களுக்குப் புரிந்தது!

'தனி மனிதர்' என்ற அளவில் பார்க்கும்போது, விஞ்ஞான அறிவில அவர் ஒரு 'தெய்வ'மாகக் காட்சி தருகிறார்! ஆனால், 'அவரது அறிவு ஏன் மக்கள் அளவில் முழுமையும் பயன்படவில்லை' என்ற கேள்விக்குத்தான் அவரிடமிருந்தும் பதில் பெற முடியவில்லை!

'அவர், மற்றவர்களை அனுசரித்துப் போவதில்லை' என்ற ஒரு கருத்து சிலரிடையே இருப்பது உண்மைதான்; 'மற்றவர்களும் அவரது இயல்புக்கு ஒத்துவருவதில்லை' என்பதற்கு ஓர் உதாரணத்தினை உரையாடலின் இடையே உணர முடிந்தது.

"நகராட்சியின் படிப்பகத்துக்கு கிடைப்பதற்கரிய புத்தகங்களை இலவசமாகத் தருகிறேன் என்று சொன்னேன்; 'வாங்கிக் கொள்வதற்கு நடைமுறையில் அனுமதி இல்லை' என்றனர்; பின்னர் சிறிது நாட்களில், 'படிப்பகத்துக்கு நிதியுதவி வேண்டும்' என்று வந்தார்கள்; 'தர முடியாது' என்று கூறி மறுத்துவிட்டேன்; நான் செய்தது தவறு?"

எங்களால் இக்கேள்விக்குப் பதிலளிக்க முடியவில்லை!

'விஞ்ஞானியாயிற்றே' என்று 'டெலிவிஷன்' பற்றிக் கேட்டதற்கு அவர் தந்த பதில்—

"சங்கீதம் வியாதிகளை உற்பத்தி செய்கிறது; ஜாதகம் சாவுகளை அதிகரிக்கிறது; பல ஆண்டுகளுக்குமுன்பு நான் அமெரிக்காவிலேயே பேசினேன் இதை!"

என்று சொல்லிவிட்டு 'துரைசாமி' என்கிறார்; 'இதோ இருக்கிறது ஐயா அந்தப் புத்தகமே' என்று உதவியாளர் நிற்கிறார் பக்கத்தில்! மேலே குறிப்பிட்ட பேச்சுவரும் பக்கத்தை, ஒரு நொடியில் எடுக்கிறார் நாயுடு!

மூலைக்கு மூலை அவர் குவித்து வைத்திருக்கும் இரும்புகளின் தன்மையோ, 'அவரது இதய வலிவு' ஒன்று ஆச்சரியப்பட வைக்கிறது; ஆனால் அவரது போக்கு -- இல்லையென்றால், 'அத்தனையையும் தகர்க்கப்போகிறேன் ஒரு நாள்' என்று சர்வ சாதாரணமாகக் கூறுவாரா?

எந்தப் பப்பாளி வகைக்கும் இல்லாத இனிப்பினை, தாம் உருவாக்கியிருக்கும் பப்பாளிக்கு ஊட்டியிருக்கிறார் அவர்! அதைப்போலவேதான், தனித் கன்மையுடன் இனிக்கிறது அவரது குழந்தைப் பேச்சும்!

'விஞ்ஞானி என்றால் இப்படித்தான் இருப்பார்' என்ற ஒரு கற்பனை உருவம் நம்மில் ஒவ்வொருவரிடையேயும் உருவாகியிருக்கும்; நடை -- உடை -- பாவனை -- மொழியில் சரியான 'கோயம்புத்தூர் ஆசாமி'யைப்போல் இருக்கும் இந்த அதிசய மனிதர், ஒரு விந்தை விஞ்ஞானிதான்!

தமிழக மின்சார வாரியம்

விளம்பர அறிக்கை

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பங்கள் (Separate Sealed Tenders) அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பங்கள் 13-12-68-ந்தேதி பிற்பகல் 1-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருள்களின் விவரம்	வழங்க வேண்டிய இடம்	சுமாராக தேவைப்படும் அளவு
1.	34/68-69	எல். டி. திரி பேஸ் ஆங்கிள் கிராஸ் ஆரம்	கரூர்	3,000 நம்பர்
2.	35/68-69	ஷை	பெரம்பலூர்	3,000 நம்பர்
3.	36/68-69	ஷை	மணப்பாறை	3,000 நம்பர்
4.	37/68-69	ஷை	திருவாரூர்	3,000 நம்பர்
5.	38/68 69	ஷை	திருச்சி	3,000 நம்பர்
6.	39/68-69	எச். டி. கிராஸ் ஆரம் 1.06 மீ (3' 6")	கரூர்	2,000 நம்பர்
7.	40/68-69	ஷை	மணப்பாறை	2,000 நம்பர்
8.	41/68-69	ஷை	பெரம்பலூர்	2,000 நம்பர்
9.	42/68-69	ஷை	திருவாரூர்	2,000 நம்பர்
10.	43/68-69	எச். டி. கிராஸ் ஆரம் 1.37 மீ (4' 6")	திருச்சி	1,000 நம்பர்
11.	44/68-69	ஷை	மணப்பாறை	1,000 நம்பர்
12.	45/68-69	24'நீளமுள்ள காங்கிரீட் கம்பங்களுக்கான பேக் கிளாம்ப் (ஆர்டினரி)	திருச்சி	15,000 நம்பர்

மேற்படி பொருள்களைப் பற்றிய குறிப்புகள், ஏனைய நிபந்தனைகள் அடங்கிய பிரதிகளை (Tender Specification forms) பிரதி ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வீதம் (திரும்பப் பெறக் கூடியதல்ல) 'தலைமைக் கணக்காயர், செலவுப் பிரிவு, திருச்சி மின் அமைப்பு, திருச்சிராப்பள்ளி-1' அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மணியார்டர் கூப்பனில் தேவையான சாற்றுக் குறிப்பு எண் தெளிவாகக் குறிப்பிடப்படாமல் இருந்தால் மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விலை ஒப்பங்கள் 13—12—68-ந் தேதி பிற்பகல் 3-00 மணிக்கு அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலததிற்குப் பின்னா வந்துசேரும் விலை ஒப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேற்கண்ட பொருள்களை வழங்குவதற்கான உத்தரவை ஒருவருக்கோ அல்லது பலருககோ கொடுக்கவும், எந்த ஒருவருடைய விலை ஒப்பந்தத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பங்களையுமோ நிராகரிக்கவும் அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

பிரதிகள் வேறு நபருக்கு மாற்றிக் கொடுக்கக் கூடியதல்ல. தபாலில் வரும்போது பிரதிகள் தவறிவிட்டால் அதற்கு இந்த வாரியம் பொறுப்பாகாது.

மன்னார்புரம்,
த. பெ. எண் 51
திருச்சிராப்பள்ளி-1

மேற்பார்வை மின் பொறியாளர்,
திருச்சி மின் அமைப்பு

கரூர் வட்டத்தில் கே. ஏ. மதியழகன்

கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

29—11—68-ல், கரூர் வட்டத்தில் உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் வருமாறு:—

காலை 9 மணி: குளத்துப்பாளையம் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 10 மணி: பரமத்தி உயர்நிலைப் பள்ளி (இலக்கிய மன்றம்)—படத் திறப்பு; 10-30 மணி: பரமத்தி ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு; 11 மணி: சின்னதாராபுரம் கழகக் கட்டிடத் திறப்பு; 11-30 மணி: சின்னதாராபுரம் ஊராட்சி வரவேற்பு; பகல் 12 மணி: தென்னிலை பொதுமக்கள் வரவேற்பு; மாலை 3 மணி: மொஞ்சலூர் ஊராட்சி அலுவலகக் கட்டிடத் திறப்பு; 4 மணி: கரூர் நெசவாலை சொந்தக்காரர்கள் சங்க வெள்ளி விழா; இரவு 7 மணி: கரூர் இராசலிங்கம் மன்றத்தில் பொதுக்கூட்டம்.

எல்லா நிகழ்ச்சிகளிலும் மாவட்டச் செயலாளர் அன்பில தர்மலிங்கம் அவர்கள் கலந்துகொள்வார்.

உதகை நகர தி. மு. க.

தோழர்கட்கு:

"உதகை நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 29—11—68-ல், நகர தி. மு. க. அலுவலகததில் நடைபெறும்; உறுப்பினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாகக் கொண்டு வருகை தர வேண்டுகிறேன்; கூட்டத்தில் நீலகிரி மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. பி. முருகேசன் எம்.சி. கலந்துகொள்வார்; பொருள்: நகராட்சித் தேர்தல்" என்று, நகர தி. மு. க. செயலாளர் தி. செயராமன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

டிசம்பர் முதல் நாள்

மகிழ்ச்சி விழாக் கூட்டங்கள்

நாகப்பட்டினம்	...	ப. உ. சண்முகம் எம்.எல்.சி. எம். எஸ். வெங்கடாசலம் எம்.ஏ.பி.எல்.
விருதுநகர்	...	டி. கே. சீனிவாசன் எஸ். எஸ். தென்னரசு
தஞ்சை	...	ஆலடி அருணா எம்.எல்.ஏ. மன்னை நாராயணசாமி மாணவர் இராசா முகம்மது
வாலாசா	...	எஸ். முருகையன் எம்.எல்.ஏ. மாணவி கஸ்தூரி

குறிப்பு:—நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊர் வாரியான பட்டியலில் மேற்கண்டுள்ள விவரப்படியான திருத்தம்செய்யப்படுகிறது

மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அதிகரிப்பு

புதுடில்லி, நவ. 27—

"நாட்டின் எண்ணெய்த் தூய்மை ஆலைகளில் மண்ணெண்ணெய் உற்பத்தி அதிகரித்திருப்பதனால், மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் அளவை 10,000 டன் வீதம் அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த அதிகரிப்பு டிசம்பரிலிருந்து கிடைக்கும்.

ஒளித்து வைக்கப்பட்ட வைரங்கள் சிக்கின!

சென்னை, நவ. 25—

ரூ. 1,15,000 மதிப்புள்ள வைரங்களும் ரூ. 20,000 பெறுமானமுள்ள தங்க நகைகளும் -- சவரன்களும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பிடிபட்டன.

சிங்கப்பூரிலிருந்து 'ஏர் இந்தியா' விமானத்தில் வந்திறங்கிய ஒரு இந்தியப் பயணியிடமிருந்து சுங்க இலாகா அதிகாரிகள் இவற்றைக் கைப்பற்றினர்.

இந்தப் பயணியின் மூட்டைக்குள் வைரங்கள் மிகச் சாமர்த்தியமாக ஒளித்துவைக்கப்பட்டிருந்தனவாம்.

காந்தியாரின் கொள்கைகளைக் கைவிட்டு விட்டனர்!

அவரைப் பற்றிப் பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது?

மத்திய அமைச்சரவைமீது கிருபளானி தாக்கு

புதுடில்லி, நவ. 27—

மத்திய அரசு ஊழியர்களின் அடையாள வேலைநிறுத்தத்தின் போது பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை நிராகரிக்கக் கோரும் எதிர்க் கட்சியின் தீர்மானத்தை மக்களவை நிராகரித்து விட்டது; அரசு மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் பிரேரணைக்கு ஒப்புதல் அளித்தது.

விவாதத்தின போது, 'இது போன்ற நிலைமையில காந்தியார் என்ன செய்ய நினைத்திருப்பார் என்று வாக்குவாதம் நடைபெற்றது; இரயிலவே அமைச்சர் சி. எம். புனச்சாவும்--உறுப்பினர் பொன்னடசும் காந்தியார் கருத்துக்களை மேற்கோள் காட்டிப் பேசினர்; உடனே ஆச்சாரியா கிருபளானி, உரத்த குரலில், "இதுபோன்ற தகராறுகளில் காந்தியார் பெயரை இழுக்காதீர்கள்; அவருடைய கொள்கைகளையெல்லாம் கைவிட்டு விட்டதால், காந்தியாரைப் பற்றிப் பேச இந்த அரசுக்கு உரிமையில்லை" என்றார்.

சின்னதாராபுரம் தி.மு.க. பணிமனை திறப்பு விழா

அமைச்சர் கே. ஏ. மதியழகன் கலந்துகொள்வார்

சின்னதாராபுரம் தி. மு. க. பணிமனை திறப்பு விழா, 29—11—68 பகல் 11-மணியளவில், திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்; உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன, பணிமனையைத் திறந்துவைப்பார்; அறிஞர் அண்ணா உருவப் படத் திறப்பு: ஆர். என. இராமசாமி; கொடியேற்றுபவா: பரமத்தி சண்முகம்; தோழர்கள் எஸ். கந்தசாமி எம.எல்.ஏ., கே. ஜி. உமாகாந்தன், பு. வே. இராமசாமி ஆகியோர் பேசுவர்.

கி.ஆ.பெ. விசுவநாதம் 70-வது பிறந்த நாள் விழா

28—11—68 மாலை 6-15 மணியளவில், சென்னை--எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ. மணடபத்தில், திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 70-ம் ஆண்டு பிறந்த நாள் விழா கொண்டாடப்படும்; புலவர் மே. வீ. வேணுகோபாலனா தலைமை தாங்குவா; பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் வாழ்த்துரை வழங்குவார்; கி. ஆ. பெ. விசுவநாதம அவர்களும் விழாவில கலந்துகொண்டு, 'நபிகள் நாயகம் பொனமொழிகள' குறித்துச் சிறப்புரையாற்றுவார்.

கல்வி -- தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவ. 29 காலை 9-மணி: பனங்குளம்—பள்ளிக் கட்டிடத் திறப்பு; 11-மணி: பேராவூரணி—உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் திறப்பு; பிற்பகல் 3-மணி: சேதுபாவாசத்திரம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 4-மணி: அழகியநாயகிபுரம்—விவசாயக் கிடங்கு திறப்பும் ஊராட்சிமன்ற வரவேற்பும்; 5-மணி: பட்டுக்கோட்டை—முன்சீப் கோர்ட் பொழுது போக்கு மன்ற நிகழ்ச்சி; இரவு 7-மணி: பட்டுக்கோட்டை பொதுக்கூட்டம்; 9-மணி: பேராவூரணி பொதுக்கூட்டம்.

நவ. 30 காலை 7-30 மணி: சீரங்கம் கோவிலுக்குச் செல்லல்; 8-30 மணி: சீரங்கம் கோவில் பொருட்காட்சி கலைக்கூடம் துவககி வைத்தல்; 9-30 மணி: சமயபுரம் கோவில் செல்லல்; 11 மணி: திருவானைக்கோவில்—உயர்நிலைப் பள்ளியில் படத் திறப்பும் சொற்பொழிவும்; பகல் 12 மணி: திருவானைக் கோவில்—கோவிலுக்குச் செல்லல்; பிற்பகல் 2-30 மணி: கம்மநல்லூர் (கிருஷ்ணராயபுரம் தொகுதி)—ஊராட்சிமன்றக் கட்டிடம் திறப்பு; 3-மணி: கோரகுத்தி—பள்ளிக் கட்டிடம் திறப்பு; மாலை 4-மணி: வெங்கடாபுரம்—வாஜெலி கட்டிடம் திறப்பு; 5-மணி: மருதூர்—பள்ளிக் கட்டிடம் திறப்பும், பேரூராட்சி மன்ற வரவேற்பும்; 6-மணி: குளித்தலை—விவசாயிகளுக்கு நில அடமான வங்கி காசோலை வழங்கலும், ஊராட்சி ஒன்றிய வரவேற்பும்; இரவு 7-மணி: கல்லடி—தி. மு. க. அலுவலகத் திறப்பு; 8-மணி: குளித்தலை—பொதுக்கூட்டம்.